## பிரதமர் மோடியின் முறைகேடுகளை விட - ம.பி. மாநில

# பா.ஜ.க. முதல்வரின் ஊழல் பட்டியல் நீளமானது!

## பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு!

போபால், ஜுன் 14-

மத்தியப் பிரதேச பா.ஜ.க.வின் 220 மாத ஆட்சியில் 225 ஊழல்கள் அரங்கேற்றப்பட்டுள்ளது என காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் நடப்பாண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி தற்போதே தேர்தல் பிரச்சாரத்தை துவங்கியுள்ளது.

இந்த தேர்தல் பிரச்சார துவக்க கூட்டத்தில் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கூறியதாவது:-



“மத்தியப் பிரதேசத்தில் 220 மாத ஆட்சியில் 225 ஊழல்களை பா.ஜ.க. அரசு செய்துள்ளது. அதாவது சராசரியாக ஒரு மாதத்திற்கு ஒரு ஊழல் நிகழ்வு அரங்கேற்றப்பட்டுள்ளது. தேர்தலில் வாக்குறுதிகளை அளித்து வெற்றி பெறும் பா.ஜ.க., அதனை நிறைவேற்றுவதில்லை.

பிரதமர் மோடியின் முறைகேடுகளை விட முதல்வர் சிவராஜ் சிங் சவு கானின் ஊழல் பட்டியல் நீளமானது. எங்கள் கட்சி (காங்கிரஸ்) என்ன வாக்குறுதிகளை அளித்ததோ, அவற்றை சத்தீஸ்கர் மற்றும் இமாச்சலப்பிரதேசத்தில் நிறைவேற்றியுள்ளோம். காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் நிலையைப் பாருங்கள் உங்களுக்கே புரியும்.


மத்தியப் பிரதேசத்தில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும், பல்வேறு பணிகள் மற்றும் வளர்ச்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. மத்திய பிரதேசத்தில் பா.ஜ.க. தேர்தலின் போது அறிவிப்புகளை வெளியிடுகிறார்கள், ஆனால் நிறைவேற்றவில்லை. டபுள் எஞ்சின், டிரிபிள் எஞ்சின் என்று பேசுகிறார்கள். இமாச்சலப் பிரதேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும் இதையே தான் சொல்கிறார்கள். ஆனால் அதற்கு பொதுமக்கள் சரியான பாடத்தை காட்டியுள்ளனர்”.

இவ்வாறு அவர் கூறினார்.

## 'வாட்ஸ் அப்' பில் வந்தது!

உறுதி குலைந்தவனுக்கு பலமாக ஒரு படையே இருந்தும் பயனில்லை: உறுதி கொண்டவனுக்கோ கையில் ஓர் உடைந்த வாளே போதுமானது.

- முத்தமிழறிஞர் கலைஞர்.



## மக்களை நம்பியுள்ள எங்களுக்கு

# ஒருபோதும் பா.ஜ. ஆதரவு தேவையில்லை!

## ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் பேச்சு!

திருமலை, ஜுன் 14 -

சமூக நீதிக்கும் அநீதிக்கும் போர் நடக்க உள்ளது. மக்களை நம்பியுள்ள எங்களுக்கு பா.ஜ. ஆதரவு தேவையில்லை என ஆந்திர மாநில முதல்வர் ஜெகன்மோகன், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவிற்கு பதிலடி கொடுத்து பேசினார்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில், ‘ஆந்திராவில் ஜெகன் மோகன் தலைமையிலான அரசு கடந்த 4 ஆண்டுகளில் ஊழல் மட்டுமே செய்துள்ளது’ என குற்றம்சாட்டி இருந்தார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக யாருடைய கூட்டணியும் எனக்கு தேவையில்லை என்று ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் அறிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம், பல்நாடு மாவட்டத்தில் நேற்று பள்ளிகளில் இந்த கல்வியாண்டிற்கான தொடக்க விழா நிகழ்ச்சி நடந்தது. முதல்வர் ஜெகன்மோகன் விழாவில், தலைமை தாங்கி மாணவ, மாணவிகளுக்கு கல்வி உபகரணங்களை வழங்கி பேசியதாவது: -

ஏழை குழந்தைகள் மற்றும் ஏழை குடும்பங்கள் படித்தால் சந்திரபாபுவுக்கு பிடிக்காது. அவர்கள் ஆங்கில மீடியத்தில் படித்தால், அவர்களுக்கு டிஜிட்டல் கல்வி கிடைத்தால் பொறுத்து கொள்ளமாட்டார். அதுதான் சந்திரபாபுவின் மனநிலை. ஏழைகள் முன்னேறக் கூடாது என்ற எண்ணம் எப்போதும் சந்திரபாபுவிடம் உள்ளது. முதல்வர் பதவியில் இருந்து 14 ஆண்டுகள் ஆன பிறகும் சந்திரபாபுவின் பெயரை சொன்னால் அவர் செய்த ஒரு நல்ல பணியும் நினைவுக்கு வராது. தெலுங்கு தேசம் கட்சி கடையை மூட தயாராக உள்ளது. சமூக நீதிக்கும் அநீதிக்கும் போர் நடக்க உள்ளது. ஒவ்வொரு வீட்டிற்கும் இந்த அரசு கொண்டு வந்த திட்டத்தால் பலன் கிடைத்துள்ளதை அறிந்து, இந்த அரசுக்கு போர் வீரர்களாக மாற வேண்டும். ஜெகனை பா.ஜ. ஆதரிக்காமல் இருக்கலாம். ஆனால், ஜெகன் யாரையும் நம்பவில்லை. கடவுளின் ஆசீர்வாதத்தையும், மக்களின் நம்பிக்கையையும் மட்டுமே நம்புகிறோம். தவறான பிரச்சாரங்களை யாரும் நம்ப வேண்டாம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று (13.06.2023) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், யோகா மற்றும் இயற்கை மருத்துவ சுயநிதி கல்லூரி மாணவர் சேர்க்கை பகிர்ந்தளிப்பு தொடர்பான கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் ஹோமியோபதி துறை ஆணையர் திருமதி. மைதிலி. கே. ராஜேந்திரன், இணை இயக்குநர்கள் மரு.மணவாளன், மரு.பார்த்திபன் மற்றும் தனியார் கல்லூரி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## நல் ஆளுமை: தேசிய அளவில் கோவை மாவட்டம் - பிச்சானூர் ஊராட்சிக்கு விருது!

# முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் - ஒன்றிய அரசின் விருதினை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, ஜுன்.14-

நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி காண்பித்து வாழ்த்து பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (13.6.2023) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்றதற்காக கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24-ஆம் நாள் தேசிய ஊராட்சிகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் தேசிய அளவில் சிறப்பாக செயல்படும் ஊராட்சிகளைப் பெருமைப்படுத்தும் விதமாக, உள்ளூர்மயமாக்கப்பட்ட நீடித்த, நிலைத்த வளர்ச்சி இலக்குகளை மையப்படுத்தி 9 கருப்பொருட்கள் இனங்காணப்பட்டு, அவற்றில் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு ஒன்றிய அரசால் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், 2022-23 ஆம் ஆண்டில் தேசிய அளவில் சிறப்பாக செயல்புரிந்த 27 கிராம ஊராட்சிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இதில், தமிழ்நாட்டிற்கு நல் ஆளுமை உள்ள கிராம ஊராட்சி எனும் கருப்பொருளில் தேசிய அளவில் முதலிடம் பெற்ற கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை ஊராட்சி ஒன்றியம், பிச்சானூர் ஊராட்சிக்கு குடியரசுத் தலைவர் அவர்களால் 17.04.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் மரு.தாரேஸ் அஹமது, பிச்சானூர் ஊராட்சி மன்றத் தலைவர் பொ. மருதாசலம், பிச்சானூர் ஊராட்சி செயலர் திருமதி.வ.உமாமகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

